Embassy of Japan

No. 20, Gregory's Road, Colombo 7, Sri Lanka
TEL: 94-11-269-3831~3, FAX: 94-11-269-8629
E-mail: cultujpn@co.mofa.go.jp /www.lk.emb-japan.go.jp

**PRESS RELEASE**

செப்டெம்பர் 13, 2011

**மட்டக்களப்பு வாவியின் குறுக்கே மண்முனையில் பாலம் அமைக்க ஜப்பான் உதவுகிறது**

கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்படும் வரும் அபிவிருத்தியை துரிதப்படுத்துவதையும் இப்பிரதேச மக்களின் சமூக பொருளாதார மன்னேற்றத்தையும் நோக்காகக் கொண்டும், ஜப்பானிய அரசாங்கம் மட்டக்களப்பு வாவியின் குறுக்கே மண்முனை பாலத்தை அமைக்க 1206 மில்லியன ஜப்பானிய யென் (அண்ணளவாக ரூ. 1600 மில்லியன்) வழங்குகிறது. இச்செயற்திட்டமானது JICA நிறுவனத்தினூடாக அமுலாக்கப்படும்.

மட்டக்களப்பு மாவட்டமானது 2004 சுனாமி அனர்த்தத்தின் போது பரந்துபட்டளவில் பாதிக்கப்பட்டது. இதனால் வாவியின் கிழக்குப்பகுதியில் ஜப்பான் உட்பட்ட நன்கொடையாளர்களினால் மீள்கட்டுமாணங்கள் மேற்கொள்ளப்பட்டது. எனினும் வாவியின் மேற்குபகுதியில் மோதல் சூழ்நிலைகள் காரணமாக அபிவிருத்தி நடடிக்கைகள் மெற்கொள்ளப்படவில்லை. வுாவியின் குறுக்கே சிறிய மதகுகளே போக்குவரத்திற்கு பயன்படுத்தப்பட்டன. மழை மற்றம் வெள்ள சூழ்நிலெகளில் இவற்றை பயன்படுத்த முடியாத நிலையும் இருந்தது. வாவியின் குறுக்கே கட்டப்படும் மண்முனை பாலத்தின் மூலம் மட்டக்களப்பு கிழக்கும் மேற்கும் இணைக்கப்படுவதுடன் மக்கள் இலகுவில சுகாதார கல்விசேவைகளை பெற்றுக்கொள்ளவும் வணிக வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் முடியும். இதன் மூலம் பதிய வாழ்வாதாரங்களுக்கும் வழியேற்படுத்தப்படும். மீன்வளம் மற்றும் வவசாயம் உட்பட இயற்கை வளங்களை தன்னகத்தே கொண்ட கிழக்க மாகாணமானது துரித அபிவிருத்திக்கான ஏதுனிலைகளைக் கொண்டுள்ளது. மண்முனை பாலமானது கிழக்கு மாகாண மக்களுக்கு புதிய நம்பிக்கையையும் சுபீட்சத்தையம் கொண்டு வருமென எதிர்ப்பார்க்கப்படுகிறது.

இச்செயற்திட்டம் தொடர்பான ஒப்பந்தம் இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் குனியோ தகஹசி மற்றும் நிதி திட்டமிடல் அமைச்சின் செயலாளர் DR. P.B. ஜயசுந்தர ஆகியோருக்கிடையே நிதி திட்டமிடல் அமைச்சில் இன்று (13-09-2011) கைமாற்றிக்கொள்ளப்பட்டது. இச்செயற்திட்டம் தொடர்பான ஒப்பந்தமானது JICA நிறுவனத்தின் இலங்கைக்கான பிரதிநிதி Mr. அகிரா சிமுரா மற்றும் Dr. P.B. ஜயசுந்தர ஆகியோருக்கிடையே கைச்சாத்திடப்பட்டது.

****************************************************************************

Please contact the Economic Cooperation Section of the Embassy for further information, Tel: 011-269-3831 (Ext.224)